# சேலம் - இளைஞர் அணி மாநாடு : குமரியில் இரு சக்கர வாகன மாபெரும் எழுச்சிப் பயணம்!

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்!











## 2-வது இளைஞர் அணி மாநில உரிமை மீட்பு மாநாடு: டிசம்பர் 17 - சேலம்!



- நவம்பர் 15 முதல் - 27 வரை!
- 13 நாட்கள் - 8,647 கிலோ மீட்டர்!
- 188 - இரு சக்கர வாகனங்கள்!
- 504 - பிரச்சார மையங்கள்!
- 234 தொகுதிகளிலும் கொள்கை முழக்கப் பயணம்!







சேலத்தில் டிசம்பர் 17ல் நடைபெறவுள்ள 2-வது தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டை ஒட்டி கன்னியாகுமரியில் மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்று நேற்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின்போது மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.